விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 ஆனி 11 துல்ஹஜ்ஜா 20 இதழ் 37
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 25-06-1989

Jaffna Sri Lanka
RECEIVED
1989-6-26
Periodicals
Library

## சீனாவில் பெரும் மாற்றம்! பொதுச்செயலாளர் பதவி நீக்கம்

(பீக்கிங்)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்டதலைவரும் சீர்திருத்த சிற்பிகளில் ஒருவரும் சீன கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலாளருமான ஷி வுல்சியாங் [62 வயது] கட்சியின் எல்லாப் பதவிகளிலும் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

பீக்கிங்கில் நேற்று நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின்

(8-ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி: ஒருவர் பலி! வாகனமும் பலத்த சேதம்!

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் நேற்று நண்பகல்இடம்பெற்றகண்ணிவெடி சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். மற்றும் நால்வர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனு

(8-ம் பக்கம் பார்க்க)

# வடபகுதி தமிழ் இளைஞர்கள் கொழும்பில் பரவலாக கைது!

## கடந்த வாரத்தில் மட்டும் 260 இளைஞர்கள் விசாரணை!

(நமது சிறப்பு நிருபர்)

கொழும்பில் தங்கியிருக்கும் வடபகுதி தமிழ் இளைஞர்களைக் கைது செய்து விசாரணை செய்வதில், இலங்கைப் பொலிஸார் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டும் சுமார் இருநூறு தமிழ் இளைஞர்களும் மூன்றுதினங்களுக்குமுன் ஒருஒட்டலில் சுமார் 60தமிழ் வாலிபர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவசரகால நிலைமைச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரே பொலிஸாரின் கெடு

(8-ம் பக்கம் பார்க்க)

## ரூ. 60லட்சம் வெளிநாட்டு கரன்ஸி நோட்டுக்கள்!

### 'ஏயர்லங்கா' விலிருந்து கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

கட்டுக்கட்டாக வெளிநாட்டுக் கரன்ஸி நோட்டுக்கள் 'ஏர் லங்கா' விமானத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் பெறுமதி, இலங்கை நாணயத்தின்படி 60 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விமானம் ஜப்பான் செல்வதாக இருந்தது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலுள்ள சுங்க அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து வெளிநாட்டுக் கரன்ஸி நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## திடீர் சுற்றிவளைப்பு

### இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் நேற்று உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, இளைஞர்கள் பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் கைதடியிலுள்ள பத்து வயதிலிருந்து நாற்பது வயதிற்குட்பட்ட சகல ஆண்களையும் கைதடி கயிற்றசட்டி கந்தசுவாமி கோயிலடியில் கூடுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சகல ஆண்களும் குறிக்கப்பட்ட கோயிலடிக்குச் சென்றார்கள்.

கோயிலுக்கு சென்றவர்களில் பலர் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இச்சம்பவத்தினால் கைதடிச் சந்தியிலுள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் நேற்றுக் காலை மூடப்பட்டிருந்தன.

## நெல்லியடியில் தொடர்ந்து குண்டுவெடிப்பு, சூட்டுச்சத்தங்கள்!

[வடமராட்சி]

நெல்லியடிச் சந்தியில் நேற்றுக் காலை கிரனைட் குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து நெல்லியடியை அண்மித்த பகுதிகளான மூத்த விநாயகர் கோவிலடி, நாவலர் மடம், கலட்டி ஆகிய இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:- கடந்த 10நாட்களுக்குப் பின்னர் நெல்லியடி நவீன சந்தை நேற்றுக் காலை திறக்கப்பட்ட போதிலும்,

(8ம் பக்கம் பார்க்க)

## 500 ரூபா கள்ளநோட்டு?

[கொழும்பு]

நாட்டில் 500 ரூபா கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருப்பதாகவும், பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் பொலிஸ்திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## பாதுகாப்பு அரண்மீது தீவிரவாதிகள் திடீர்த்தாக்குதல்

### இருவர் கொலை துப்பாக்கிகள் அபகரிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் இடம்பெற்ற சம்பவமொன்றில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், ஒரு டசின் தானியங்கித் துப்பாக்கிகளும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

இராணுவ உயர் அதிகாரிகளின் வீடுகளுக்கு பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அரண் ஒன்றின் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் இருவர் இறந்துள்ளதுடன் அவர்கள் வசமிருந்த துப்பாக்கிகளும் அபகரிக்கப்பட்டது.

## வளலாய், இடைக்காடு: பல இளைஞர்கள் விசாரணை

[யாழ்ப்பாணம்]

வளலாய், இடைக்காடு பகுதிகள் நேற்றுக் காலை சுற்றிவளைக்கப்பட்டு சுமார் 30 இளைஞர்கள் விசாரணைக்காக முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த இளைஞர்களை விடுவிக்கும் முயற்சியில் முகாம் உயர் அதிகாரியுடன் பெற்றோர் தொடர்பு கொண்டுள்ளனர்.

## கந்தரோடையில் இளைஞர் சடலம்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் சடலமொன்று நேற்றுக்காலை சுன்னாகம் கந்தரோடை வீதியில் தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில் காணப்பட்டது.

சுன்னாகம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த இராமநாதன் கணேசகுமார் (வயது 19) என்பவரது சடலம் என்று பின்னர் அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை, மரண விசாரணை ஆகியவற்றுக்காக சடலம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூடு: இரு சகோதரர்பலி!

(வடமராட்சி)

கடற்றொழில் செய்யும் இரு சகோதரர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

நாகர் கோவில் வடக்கைச் சேர்ந்த எஸ். முருகேசு (55 வயது), எஸ். நடேஸ் (60 வயது) ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

நேற்று முன்தினம் காலை நாகர் கோவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்[illegible]

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களின் தொடர்ச்சியான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, இன்று தொடக்கம் ஜூலை [illegible]குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பந்தல்

சைவ வேளாளகுல அழகிய 30வயது அக்கவுண்டன் மணப் பெண்ணுக்கு படித்த உயர் பதவி வகிக்கும் மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப் படும். சாதகக்குறிப்பு மற்றும் விபரங்களுடன் உடன் விண் ணப்பிக்கவும். விளம்பர இல. சி- 2819 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி 2819]

## கல்வி

S. K. ஜீவமோகனின் O/L கணித வகுப்புக்கள் அதிசித்தி பெற தொடர்புகொள்க: ஸ்ரார் பியூப்பில் 'அக்கடமி, கல்வியங்காடு. [தனிப்பட்ட முறையிலும் கல்வி பெறலாம்] [சி-2794]

## தவறிவிட்டது

வட்டு- இந்துக்கல்லூரிக்கும் சித்தன்கேணி சிவன்கோவி லடிக்கும் இடையில் என் வலப்புடன் ஒரு தொகைப் பணம் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து 'ஈழநாடு' நிர்வாகப்பகுதி யுடன் தொடர்புகொள்ள வும். சன்மானம் வழங்கப் படும். (சி 3010)

## விற்பனைக்கு

வட இந்தியா முறைப்படி சுத்தமாக தயாரிக்கப்பட்ட வெள்ளைப் பூடு அச்சார், தேசிக்காய் ஊறுகாய் எங்க ளிடம் கிடைக்கும். M. G. M. 777, K. K. S. Road, 208, 1st Cross st. Jaffna. (சி 2930)

Nallur Farm Centre, Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Brolier குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Golden Comet பேட்டுக்குஞ்சு கள் Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/புதன்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் இலவச மாகப் பெற்றுக்கொள்ளுங் கள். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை யடி, நல்லூர். (சி 2798)

## நாவல்கள்

கதையில், கருத்தில், கன் னித்தமிழ் உரையாடல்களில் சிறந்த நாவல்களான மீரா வெளியீடுகள் ரூபா (10, 15, 20, 25, 30) விலைகளில் விற் பனைக்குண்டு. வீட்டிலிருந்த படியே பணம் அனுப்புங்கள் தபாலில் பெறுங்கள். மீரா வெளியீடுகள், 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். விரை வில் ''பூஜைக்காக வாழும் பூவை'' (கே. எஸ். ஆனந் தன்.) (சி 3006)

## விற்பனைக்கு

வண்ணார்பண்ணை நாவலர் வீதியில் ஒரு பரப்பு 11 குளி கள் காணி விற்பனைக்குண்டு. இல. 177 (131). நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(சி 3007)

## இருசடலங்கள் அடையாளம் காணப்பட்டன

(வவுனியா)

வவுனியாவில் சுட்டுகொல் லப்பட்ட இருவரும் உறவி னர்களால் ஆஸ்பத்திரியில் வைத்து அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

தாண்டிக்குளத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டவர் சாந்தசோலையைச் சேர்ந்த பெரியசாமி பெரியதம்பி (வயது ?8) என்றும் வேப்பங் குளத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டவர் துரைசிங் கம் மோகனராஜ் (வயது 22) என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தெல்லிப்பழையில் ஒருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நிகழ்ந்துள் ளது.

சுட்டுக் கொல்லப்பட்டவர் தெல்லிப்பழை ஸ்ரேசன் வீதி யைச் சேர்ந்த வல்லிபுரம் முருகேசு (வயது 67) என்று அடையாளம் காணப்பட்டுள் ளது. தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடை பெற்ற மரண விசாரணையின் பின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ஊழியர்களுக்கு வீட்டுத் திட்டம்

(மன்னார்)

மன்னார் கல்வித்திணைக்களத் தில் கடமை புரியும் ஊழியர் களின் நன்மை கருதி அவர் களுக்கென ஏற்கனவே மன் னார் அரசாங்க அதிபரால் ஒதுக்கப்பட்ட காணியில் வீடு கட்டுவதற்கு ஏற்பாடுகள்செய் யப்பட்டுள்ளன. இவ்விடயத் தில் மன்னார் பிரதேசக் கல் விப் பணிப்பாளர் திரு. ஆ. சுந் தரலிங்கம் மிகுந்த சிரத்தை யுடன் வீடுகளை நிர்மாணிக்க முயற்சிகள் எடுத்து வருகின் றார். இதற்கான நிதியை மாவட்ட திட்டமிடல் பணிப் பாளர் திரு. எஸ். ஆர்.இராச நாயகம் மாவட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து வழங்கியுள்ளார்.


பிரகாசமான சலவைக்கு

பிறைற் சோப்




உறைகளைச் சேகரியுங்கள்
பரிசுகளைப் பெறுங்கள்

பிறைற் சோப்
இன்டஸ்றீஸ் - மல்லாகம்.

(ஏ 233)



# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

## Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

O தபால் மூலம் ஆங்கிலம் கற்று ஒருபோதும் கதைக்க முடியாது என சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன், ஆனால் உங்களின் உளவியல் ரீதியில் அமைந்த பாடங்கள் எனது இலட்சியத்தை அடையவும், பய உணர்வையும் அகற்றிவிட்டது.
செல்வி பாத்திமா சனிமா
எலுவில, பாணந்துறை.

O தங்களின் ஆங்கில கல்வி விருத்தி யாழ், மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது, நானும் உங்களின் பலாபலன்களைப் பெற்ற மாணவியரில் ஒருவர்.
செல்வி பிரேமாவதி செல்லையா
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

O இப்போது எனக்கு ஆங்கிலம் பேச முடியும் எனும் மனத்திடத்தை உங்கள் தபால் மூலம் கல்வி ஏற்படுத்தியுள்ளது.
செல்வி நிர்மலா தங்கவேலு
அப்புத்தளை.

O ஆங்கிலத்தை இலகுவாக மாணவர்களின் தராதரத் திற்கேற்ப ஆரம்பத்தில் இருந்து தபாலில் கற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த திட்டம் உங்களுடையதே.
செல்வன் எஸ். எம். ராசா
ஏழாலை வடக்கு, ஏழாலை.

O பிறைட்றெயினிங் சென்ரரின் ஆங்கில பாடப் பயிற்சி மூலம் நான் நல்ல பயன் அடைந்துள்ளேன்.
செல்வன் ரி. கேதீஸ்வரன்
457, கே. கே. எஸ். ரோட், கோண்டாவில்.

O குறுகிய காலத்துக்குள்ளே ஆங்கிலக்கல்வியை திறம் படக் கற்றுக்கொடுக்க உங்களின் பிறைட் றெயினிங் சென்ரரால்தான் முடியும்.
செல்வன் ச. செல்வகுணச்சந்திரன்
ஓடக்கரை, பருத்தித்துறை.

**எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க:**

**BRIGHT TRAINING CENTRE,**
**P. O. Box 162, COLOMBO.**
(பி-274)


# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வித்திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்

ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரண திட்டத்தின்கீழ்

## யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989ம் ஆண்டு யூலை மாதம் 11-ம் திகதி (11-7-89) முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடியதொகைக்கு, கட்டிட வேலை செய்வதற்கென கல்வித்திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம், கட்டிடத்திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக் காரர்களுக்கு 1989-ம் ஆண்டு யூலை மாதம் 7-ம் திகதி (07-07-1989) பிற்பகல் 2-00மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப்பணமாக ரூபா ஐம்பதும் (ரூ. 50/-)- மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூபா 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண் டும். கேள்விகள் 1989-ஆம் ஆண்டு யூலை மாதம் 11ம் திகதி (11-07-1989) பிற்பகல் 2-00 மணிக்கு யாழ. கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமூக மளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச்செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைந்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின்படியும் தவறாது வேலையைப் பூர்த்திசெய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிடவேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செல்வி. தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்.
யாழ்ப்பாணம்.

..............1989

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | படுக்கை விடுதி | 1, 200, 000/- |
| 2. | யா/உடுப்பிட்டி அ. மி. ஆண்கள் கல்லூரி | மூன்றுமாடிக் கட்டிடம் விஞ்ஞான கூடம் 90'/25' | 1, 700, 000/- |
| 3. | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் விஞ்ஞான கூடம் 90'/25' | 1, 700, 000/- |
| 4. | [illegible] கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் 130'/25' | 1, 800, 000/- |

(எ-305)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உன்னுடைய சொந்த மத நம்பிக்கையில் எப்பொழுதும் வலிவுடன் ஊன்றித் திடமாக நிலைத்திரு. ஆனால் மதவெறி, சகிப்புத் தன்மை யில்லாமை இவற்றை முற்றிலும் தவிர்த்துவிடு.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## கரகம் காவடி மீண்டும் வருமா?

ஒரு சமுதாயத்திற்குப் பல வரலாற்றுக் கடமைகள் உள்ளன. அவற்றில் ஒன்றை நாம் வலியுறுத்திக் கூறவேண்டியுள்ளது. அது எது? தொன்று தொட்டு வரும் பண்பாடு, மரபுக் கலைகள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாப்பதோடு அடுத்த தலைமுறைக்கும் கொடுத்துவிடவேண்டும்.

தொழிலின்மை, வறுமை தொல்லைகள், ஏக்கம் போன்ற பல நெருக்கடிக்குள் சமுதாயம்சிக்கித் தவிக்கின்றது. வயிற்றுக்கு உணவில்லாமல் மனிதன் துடித்துக்கொண்டிருக்கும் வேளையில் பண்பாடு, கலை பற்றிப் பேசலாமா?

உணவென்பது வெறும் வயிற்றிற்கு இடும் சோறு மாத்திரமன்று என்பது கிரேக்க தத்துவஞானி பிளேட்டோவின் கருத்தாகும். அவர் உடலை மூன்று பகுதிகளாக வகுத்தார். அவை எவை? தலை, இதயம், வயிறு சிந்தனையைத் தூண்டும் கல்வி தலைக்கும், கவின்கலைகள் இதயத்திற்கும், போஷாக்குணவு வயிற்றுக்கும் அவசியம் என்றுதான் அவர் கூறியதாக நினைவு.

உணர்ச்சித் துடிப்பை உரிய வழியிற் கிராக்காது விட்டால் விளைவது தீய எண்ணங்களும் தீயசெயல்களுமே. இசை, நாடகம், இலக்கியம் போன்ற கவின் கலைகள் இதயத்தை வழிப்படுத்தி இனிய வாழ்விற்கு இட்டுச்செல்கின்றன என்பது அனுபவ உண்மை.

கர்நாடக இசை, பரத நாட்டியம் போன்ற அதி நுட்பம் வாய்ந்த சாஸ்திரியக்கலைகளைப் பயில்வோர் யார்? பணவசதியும் ஓய்வும் கிடைக்கப் பெற்றவர்களுக்கே என்று ஒரு காலத்திற் கருதப்பட்டது. இன்று பாடசாலைகள் தோறும் இசை ஒரு பாடமாக வந்ததும் பயில்வோர் பலராகிவிட்டனர். எனினும் விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் போன்ற பல்வேறு பொதுமக்களினதும் கலைக்கோலங்கள் கும்மி, கரகம், காவடி, கோலாட்டம் போன்றவைகளாகும். மறைந்து போய் விடுமோ என்று அஞ்சிய காலத்தில் இவை மீண்டும் புத்துயிர் பெற்றன என்பது அண்மைக்கால வரலாறு.

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை யவர்கள் பிரதேசப் பேச்சுத்தமிழில் நாடகங்களை எழுதியதோடு பல்கலைக்கழக மட்டத்தில் அரங்கேற்றினார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் கிராமியக்கலை வடிவங்களுக்கு ஆற்றியசேவையை யார்தான் மறக்கமுடியும்?

இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளுக்கு இன்றைய பேராசிரியர்கள் சென்று கிராமியக்கலைகள், நாட்டார் பாடல்கள் போன்றவற்றை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து ஆற்றிய சேவைகள் அளப்பரியன. இந்தப்பின்னணியில்தான், பாடசாலைகளுக்கிடையேயான கலைப்போட்டிச்சுற்று நிருபத்தைப் நாம் பார்க்கவும், அதிற்காணும் சில குறைகளைச் சுட்டிக்காட்டவும் முற்படுகிறோம். சுழிபுரம் கொத்தணிஅதிபர்கள் கூட்டம் பற்றிய செய்தி ஒன்று எமது 19-6-89 பத்திரிகையில் வெளிவந்தது. தமிழர்கலாசாரத்திற்குரிய சில கலை வடிவங்கள் கைவிடப்பட்ட அவலநிலையை அதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

கிராமியநடனப்பகுதியில் மீனவநடனம, சுளகு நடனம். வாள் நடனம்போன்றவை சேர்க்கப்பட்டிருந்தும் வேறுபல தமிழர் கலாசார மரபு நடன வகைகள் சேர்க்கப்படாதது ஏன்? தமிழர் சிங்களவர் கலாசாரத்திற்குப் பொதுவானவற்றை மாத்திரம் வலியுறுத்தி ஏனையவற்றைக் 'கைகழுவிவிடும்' நோக்கம் கிஞ்சித்தேனும் இருக்காது என்பது எமது நம்பிக்கை.

பல இனமக்கள் வாழும் நாட்டில், எல்லா இன மக்களதும் பாரம்பரிய கலை வளர்ச்சியிற் பாகுபாடுகள் காட்டப்படமாட்டா என நம்புவோமாக. தற்செயலாக நடந்த தவறுயின் உரியவர்கள் கவனித்து சேர்க்க வேண்டிய நிகழ்ச்சிகளைச் சேர்க்கவேண்டும். கரகம், காவடி போன்ற நமது பாரம்பரிய கலைகளை நாம் கைவிடமுடியாது!

---

## கடந்த 40 ஆண்டுகளை விட மக்கள் இன்று சொல்லொணுக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்

(ஸி. துவான் நஸீர்)

''தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ளவும், சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ளவுமே இந்நாட்டு மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களித்தனர். எனவே அரசு அவற்றை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளது. அரசு இன்று தமது உறுதியை நிறைவேற்ற முடியாமல் தடுமாறுகிறது. அதே நேரம் அரசு தனது பாவகரமான செயல்களைக் கழுவிக் கொள்ளும் நோக்கில் எமது கட்சித் தலைவியின் பெயரையும் தந்திரமாகச் சேர்த்துக் கொண்டது வெட்கம் கெட்ட செயலாகும்.''

இவ்வாறு திரு. அநுரா பண்டாரநாயக்கா எமது நிருபரிடம் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மீண்டும் பிரயோகிப்பது தொடர்பாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் அரசுக்கு ஆதரவளித்துள்ளார் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது:

''கடந்த40ஆண்டுகாலமாக அனுபவித்துவந்த கஷ்டங்களைவிட சொல்லொணுக் கஷ்டங்களை இன்று மக்கள் அனுபவிக்கிறார்கள். ஒருபிரச்னையைத்தீர்க்கமுயன்று இன்று பலபிரச்னைகளுக்குள் அரசு சிக்கியுள்ளது. அழிவின் விளிம்புக்கு அரசு வந்துவிட்டது.

இவ்வாறான பேச்சுக்களின் மூலம் அரசின் வங்குரோத்து நிலைதான் வெளியாகிறதே தவிர இதனால் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. அரசினால் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தமுடியாது. அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் யாவும் பொய்த்துவிட்டது. எமது கட்சித்தலைவியும் பலமுறை அரசு பதவிவிலக வேண்டும் எனக் கூறியுள்ளார். அரசு அப்படி பதவிவிலகாமல் இன்னும் ஒட்டிக்கொண்டிருப்பது இந்நாட்டை மேலும் நாசமாக்குவதற்குதானு?''

---

## சுயதொழில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், கடந்தகால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்குபாரியதொழில் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்கான நிதியை இரண்டு நாடுகளின் நிறுவனங்கள் வழங்கலாம் என்றும் தெரிய வருகிறது.

---

## "மதிய போசனத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும்"

(பருத்தித்துறை)

''கிராமப்புற மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டிற்கு பாடசாலைகளில் மதியபோசனம் வழங்கும் திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும். மாணவர்களுக்கு மதியபோஷனமாக போஷாக்குள்ள உணவு வகைகள் வழங்கப்படவேண்டும். மதிய போஷனம் வழங்கும் நடவடிக்கைகளுக்குபெற்றோர்கள் நலன்விரும்பிகள் ஒத்துழைப்பு வழங்குவதுடன் சரிவர செயல்படுகிறதா என்றும் கண்காணிக்கவேண்டும்''

இவ்வாறு பருத்தித்துறை கிழக்கில் உள்ள குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலையில் மதிய உணவுத் திட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய யாழ். கல்வித் திணைக்கள விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. எஸ். செல்லத்துரை குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. வீணுகோபால் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில், விஞ்ஞானக் கல்வி அதிகாரி தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''கிராமப்புற மாணவர்கள் போஷாக்கான உணவுகள் பற்றுக்குறையால் பல்வேறு வகையான பிரச்னைகளை அனுபவித்துவந்துள்ளனர். அவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடையில் ஸ்தம்பித்துவிடவேண்டி ஏற்பட்டிருக்கின்றன. இதனால் கிராமிய அபிவிருத்திகளில் கூட ஸ்தம்பிதநிலைகளும் பல்வேறு பிரச்னைகளும் உருவாகிவந்துள்ளன.

மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கும் நடவடிக்கைகளால் மாணவர்களின் கல்வி அபிவிருத்திகளில் மேம்பாடு ஏற்பட்டு கிராமிய எழுச்சிக்கு வழிவகுக்கப்படுகின்றது. உணவு வழங்கும் குழுக்கள் சிறப்பாகச் செயற்படவேண்டும்.

அதிபர் திரு.வீணுகோபால் உரையாற்றுகையில், மாணவர்களுக்கான போஷாக்கான மதிய உணவுவகைகளை வழங்குவதற்குப் பெற்றோர்கள், நலன் விரும்பிகளின் செயற்படுகளும், ஒத்துழைப்புகளுமே மிக முக்கியமானதாகும். இப்பாடசாலையைப் பொறுத்தவரையிலே பாடசாலையின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும், மாணவர்களின் கல்வி அபிவிருத்திகளுக்கும் பெற்றோர்களும், நலன் விரும்பிகளும் நல்கிவரும் பூரண ஆதரவு பாராட்டப்பட வேண்டியதாகும்'' என்றூர்.

---

## தெல்.ப. நோ. கூ. சங்கத்தின் சேவைக்கு பாராட்டு

(மாவிட்டபுரம்)

''கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குப் பயன் தரத்தக்கதாகத் திட்டங்களைத்தீட்டி அவற்றைச் செயற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கினுல் கூட்டுறவுத் திணைக்களம் அதற்குத் தடைக்கல்லாக இருக்கமாட்டாது. அவற்றுக்கு முடிந்தளவு ஆதரவைஅளிக்கக் கூட்டுறவுத் திணைக்களம்தயாராகஉள்ளது

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவின் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. செ. இ. நித்தியராஜ் கூறினுர்.

மகளிர் குழுத்தலைவி செல்வி சகிதேவி கந்தையா தலைமையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் பல துறைகளிலும் பெரிதும் பணியாற்றி வருகிறது. மகளிர் குழு மூலம் ஆற்றும் பணிகள் பெரிதும்பாராட்டுதற்குரியது. கல்வி, கலை, கலாசாரத்துறைகளின் வளர்ச்சிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பணியாற்றவேண்டும். அபிவிருத்திப் பணிகளிலும்அதிககவனம் எடுக்கவேண்டும்'' என்றூர்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறியதாவது:-

''கூட்டுறவு இயக்க செயற்பாட்டில் மகளிரின் பங்கும் அவசியமானது. மக்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடமையுடன் சமுதாயப் பணிகளையும் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும். கூட்டுறவு இயக்கத்துடன் மக்களும் இணைந்து செயல்பட்டால்தான் அவை சிறப்பாகப்பணிபுரியமுடியும்'' என்றூர்.

மகளிர் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கு திருமதி கிறிஸ்ரின உஷா நித்தியராஜ் பரிசில்கள் வழங்கினுர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

---

# மக்கள் கருத்து

## சைவசமயம் வாழவே எழுதினேம்

ஈழநாடு (04-06-89) இதழில் 'ஆலயமணி ஒரு கண்ணேட்டம்' என்பதில் எமது ஆலய மணி விவாதக் கட்டுரையை விமர்சித்தவர் ''மறு சமயங்கள் மாள'' என்ற அணிக்குப் புத்துயிர் கொடுப்பதாக எமது விவாதம் அமைந்துள்ளதாக எழுதியுள்ளார்.

மறு சமயங்கள் மாள எழுதவில்லை. நமது சைவசமயம் வாழவே எழுதலானேம் என்பதை அனைவர்க்கும் தெரிவித்துக்கொள்கின்றேம்.

**க. கணபதிப்பிள்ளை.**
(கௌரவ இயக்குநர்)
சித்தாந்த சைவ பாதுகாப்புச் சேவை,
யாழ்ப்பாணம்.

---

## உறுதிபூசுதல் வழங்கல்

(மன்னூர்)

அண்மையில் தலைமன்னூர் பியர், தலைமன்னூர் கிராமம் ஆகிய இரு பங்குகளிலுமுள்ள சிறுவர்களுக்கு மன்னூர்ஆயர் வண. கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகத்தினுல் உறுதிபூசுதல் வழங்கும்சடங்கு சிறப்பாக நடைபெற்றது.

ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்டசிறுவர்கள்இதனைப் பெற்றுக் கொண்டார்கள். சகலஏற்பாடுகளையும் தலைமன்னூர் பங்குத்தந்தை அருட்திரு ஏ. செபமாலை செய்து வைத்தார்.

---

## தபால்சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா-கொழும்பு ரயில் சேவை நடைபெருததினுல் கொழும்பு – யாழ்ப்பாணம் தபால் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு உட்பட வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட ஏராளமான தபால்கள் கொழும்பு பிரதம தபாலகத்தில் குவிந்து கிடப்பதாகத் தெரியவருகின்றது.

---

## தொலைபேசி சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு தொலைபேசிச் சேவையில் ஐந்து என்ற இலக்கத்தை முதலாவதாகக் கொண்ட தொலைபேசிகள் நேற்று முற்றுகச் செயலிழந்தன.

இதனுல் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு தொலைபேசி அழைப்புக்களை எடுக்க வந்த பெரும்பாலான மக்கள் நேற்று ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை இரண்டு, மூன்று ஒன்பது ஆகிய இலக்கங்களை முதலாவதாகக் கொண்ட தொலைபேசி இலக்கச் சேவைகள் காலையில் இயங்கினுலும் பிற்பகலுக்குப் பின்னர் அந்தச் சேவைகளும் செயலிழந்தன.

---

## குடும்பத்துக்கு 2 கிலோ மா

(சுன்னுகம்)

வலிகாமம் தெற்கு, வடக்குப் பகுதிகளில் புதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இதற்குரிய பொருள்கள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த சகல கிளைகளிலும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும் பொருள்களை வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக [illegible] பொன்றுக்கு இரண்டு கிலோ [illegible] கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜென்டீனுவில் கலவரம் ஏன்?

## ஞாயிறு மஞ்சரி

தென் அமெரிக்காவிலுள்ள ஏழை நாடுகளில் ஒன்று ஆர்ஜென்டீனு.

ஸ்பானியர் தென்அமெரிக்க நாடுகளை அடிமைப்படுத்தி, ஆட்சிபுரிந்து, பொருளாதாரத்தைச் சுரண்டிவிட்டு மூட்டை கட்டி விட்டார்கள். இந்த லத்தீன் அமெரிக்க நாடுகளைத் தனது பிடிக்குள் வைத்திருக்கப்படாத பாடுபடுகிறது அமெரிக்க வல்லரசு,

ஆர்ஜென்டீனுவில் அண்மையில் நடந்த ஜனதிபதி தேர்தலில் தற்போதய ஜனதிபதி அல்போன்சிஸ் தோல்வியடைந்து விட்டார். பெரோனிஸ் கட்சியைச்சேர்ந்த சோல்மெனெம் வெற்றி பெற்றிருக்கிருர். ஆனுல் அங்கு மக்கள் கலவரங்கள் நடாத்தியிருக்கிருர்கள். கடைகளைச் சூறையாடியிருக்கிருர்கள். உணவுப் பொருள்களை எடுத்துச் சென்றிருக்கிருர்கள்,

பட்டினியால் வாடும் மக்கள் நிச்சயம் பட்டினிக்கலவரம் நடாத்துவார்கள் என்று தேர்தல் பிரசாரத்தின் போது எதிர்க்கட்சித்தலைவர்மெனெம் ஆருடம் கூறியிருந்தார், அவர் வென்ற பின்பும் கலவரம் நடத்திருக்கின்றது. எனவே இது அரசியற்கலவரம் என்று கூறிவிடமுடியாது.

### காரணம் என்ன

கலவரம் ஏன் நடந்தது? வழக்கமாக அரசியலிலே பதவிப் போட்டி காரணமாக– இராணுவ ஆட்சியின் இரும்புப்பிடி காரணமாக - மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதன் காரணமாக ஆர்ப்பாட்டங்களும் கலவரங்களும் நடைபெறுவது வழக்கம்.

ஆனுல் இங்கு பொருளாதாரப்பிரச்னையே முக்கிய காரணமாக இருந்திருக்கின்றது,

அங்குள்ள பொருளாதார நிலை என்ன?

பணவீக்கம் அங்கு 90 சதவீதமாகஇருக்கின்றது. சென்ற மாத வாழ்க்கைச் செலவு 75 வீதம் அதிகரித்துள்ளது. அந்த நாட்டின் ஏஸ் 'றல்' என்ற

### உலக வலம்

டாலருக்கான மதிப்பில் பெருமளவு குறைந்துள்ளது. அதனுல் அங்கு ஏற்பட்ட பணவீக்கம் சாதாரணமானதல்ல. அதனையே 'ஹைபர் இன்பிளேசன்' (Hyper Inflation)– உயர் பணவீக்கம் என்கிருர்கள்.

### உலக வங்கி மறுப்பு

நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்த போது அரசு அவசரக்கோலத்தில் ஒரு நடவடிக்கை எடுத்தது. அதாவது வெளிநாட்டுக்குக்கொடுக்கவேண்டிய கடனுக்கான வட்டியை ஒருதலைப்பட்சமாக நிறுத்தியது. வடுக்கியா கடனுக்கு வட்டி கொங்யாமல் விடுவது நியாயமா? சும்மா இருக்குமா சர்வதேச நிதி நிறுவனங்கள்?

சென்ற ஆண்டு ஆகஸ்டில் சர்வதேச நிதிநிறுவனம் (I. M. F.) நிதி உதவியை நிறுத்தியது. உலகவங்கி சற்றுப் பொறுத்துப்பார்த்தது; நிலைமையை அவதானித்தது. அதுவும் தனது உதவியை இவ்வாண்டு மார்ச்சில் நிறுத்திவிட்டது.

''ஆர்ஜென்டீனுவில் சில வருடங்களாக இரவற் பணத்தில் வாழ்ந்திருக்கிருர்கள்; தவருன முறையில் நாட்டுச் சொத்தைப் பாவித்திருக்கிருர்கள்!'' என மேற்கு நாட்டுத் தூதுவர் ஒருவர் கூறியிருக்கிருர்.

### திட்டம் இல்லையா?

ஜனதிபதி அல்போன்ஸ் புத்திசாலித்தனமாக எதையும் செய்யவில்லையா? 1985ல் 'ஒஸ்றல் திட்டம்' ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. சம்பளத்தைக் கட்டுப்படுத்தினர்; விலைக்கட்டுப்பாடு அமுல்நடத்தப்பட்டது. இந்தக் கடும் நடவடிக்கைகள் நல்ல பலனைத் தந்தது. பணவீக்கம்குறைந்தது; வங்கியிலே பணம் அதிகரித்தது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதன் பொருளாதாரம் ஓரளவுக்காயினும் ஸ்திரநிலையை அடைந்துள்ளது மறக்கமுடியாத உண்மை.

பிறகு பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டது ஏன்? ஜனதிபதி அல்போன்சிற்குத் தேர்தல் எண்ணம் வந்துவிட்டது. எவ்வாருயினும் வாக்குகளைப் பெற்று வென்றுவிடவேண்டுமென எண்ணிவிட்டார். எனவே பொருளாதாரப்பின் விளைவுகளைக் கருதாது, சம்பளங்களை அதிகரித்தார். கட்டுப்பாடுகளைத் தளர்த்தினர்.

### அடைந்த தோல்வி

தேர்தலையே குறியாகவைத்துத் 'திறந்துவிட்ட பொருளாதாரம்' வீண் விரயத்திற்கே வழிவகுத்தது. பொருளாதாரம் ஒரு சமூக விஞ்ஞானம்; நாம் நினைப்பதுபோல் அதை மாற்றியமைத்துவிடமுடியாது. ஜனதிபதி எதிர்பார்த்ததற்கு மாருக, பொருளாதாரம் வளர்ச்சி பெறவில்லை. நாட்டுக்கும் நன்மை விளைவிக்கவில்லை; அவரின் கட்சிக்கும் வெற்றியைத்தரவில்லை.

கட்சியும் தோல்வி; பொருளாதாரமும் தோல்வி. மக்கள் பணவீக்கம். வாழ்க்கைச் செலவு போன்றவற்றின்சுமை தாங்காது கலவரம் செய்திருக்கிருர்கள். இக்கலவரத்தின் இன்னேர் அம்சமும் அவசியம் கவனிக்க வேண்டியுள்ளது.

வெறும் உணவுப்பொருள்களை மாத்திரமல்லாது, வீடியோக்களையும் 'அள்ளி'ச் சென்றிருக்கிருர்கள்! இது எதனைக் காட்டுகிறது? நாட்டிலே ஏற்றத்தாழ்வுகள்

**- முனசீனு -**

குறைக்கப்படவில்லை. வருமானம் தகுந்த முறையிலே சமுதாயத்திலே பங்கிடப்படாவிடில், குரோதமனப்பான்மை வளர்ந்து வாய்ப்புள்ள வேளைகளில் வெளிக்காட்டத் தவருது!

புதியஜனதிபதி இவ்வாண்டு டிசம்பர் 10ல் தான் பதவியேற்கவிருக்கிருர். தோல்வியடைந்த அல்போன்ஸ் அதுவரை நடத்த வேண்டியது காபந்து அரசாங்கம்; அதுஒரு முடமான வாத்தின் ஆட்சி (Lame-Luck Govt) போன்றது. அந்த ஆட்சிக்கா இந்தத் தலையிடி.

# கல்லறைக் குயிலுக்கு ஒரு கவிதை மடல்!

கண்ணதாசன்!
சொற்களுக்குப் போதையேற்றி
நம்மைச்
சொக்க வைக்கின்ற
சூத்திரதாரி அவன்!

0 0 0

இன்றும் கூட
வானெலி வழியாக
அவன்
வார்த்தைச் சுகத்தை
வழங்கிக் கொண்டிருக்கிருன்!
அந்த வகையில்
நன்கு
சுவையேற்றிய வரிகளையே
எங்கள்
செவியேற்றிய பாவலன்
அவன்!

0 0 0

தமிழ்ச் சினிமாவின்
தத்துவப் பாடல்களுக்கு
அவனே
''தாய் நாடு''!
அவனது இதயம்
தமிழ்க் கவிதை குடியிருந்த
''தாய் வீடு''!

0 0 0

அவனிடமிருந்து
கவி பொழிவது போலவே
வான்
முகிலிடமிருந்து
மழை பொழிவதுமுண்டு

0 0 0

அவன் தனது
கையை விரித்தபோது
கவிதை வந்தது!
சினிமாப்
பையை விரித்தபோது
பாடல் வந்தது!

0 0 0

தமிழ்த் திரையுலகில்
இசையிலே பிசையப்பட்ட
இளகிய தமிழ்க் கவிதைகளை
நமது
இதயங்கள் தோறும்
இட்டு நிரப்பியவன்
அவன்!

0 0 0

இசைத் தமிழை
அள்ளி இறைத்த
அதே இதயந்தான்
வசைத் தமிழை
வாரி வழங்குவதிலும்
வள்ளலாய் இருந்தது!
அவன்
இசைபாடி, இசைபாடியே
இடையிடையே
வசைபாடிய
வல்லமையாளன்!

**- ஜெ. கி. ஜெயசீலன்**

[நேற்று 24-ம் திகதி கவியரசர் கண்ணதாசனின் 62-வது பிறந்த தினமாகும். அதனையொட்டி இக் கவிதை வெளியாகிறது]

# தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் நாட்டில் பத்து ஆண்டுகளுக்கு முன் பெரியார் ஞாபகார்த்தமாக - அவர் நூற்ருண்டு விழாவையொட்டித் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் சட்டவாயிலாகப் புகுத்துவதற்குச் செய்யப்பட்ட முயற்சி காரணமாக இலங்கையிலும் தமிழர் மத்தியில் இத்தகைய உணர்வு தலையெடுத்திருக்கிறது. தமிழ் எழுத்துக் சிர்திருத்தம் அவசியம் என்று இலங்கையிலும் சிலர் வாதாடி வருகின்றனர். இதன் பயனுகவேதான், தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் கொண்டுவருவது குறித்துச் சில மட்டங்களில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆகவே இன்றைய நிலையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அவசியம் என்பதற்கான குறிப்பான விபரங்களை ஆராய்வோம்.

(1) உற்பத்தி உறவுமுறை மாற்றம், தொழில் நுண்ணியல் வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக இலங்கைத் தமிழர் மத்தியில் கணனி (கம்யூட்டர்) அச்சுத் தொழில், தட்டச்சு ஆகியவற்றின் உபயோகம் சமீபகாலங்களில் அதிகரித்துஉள்ளது. இதனுல் தமிழ் எழுத்துக்களில் பணி சார்பான சீர்திருத்தம் (Functional Reforms) அவசியமாகியுள்ளது.

(2) தமிழ்நாட்டிலும், மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதால், இந்த நாடுகளில் வாழும் தமிழர்களைப் பின்பற்றவேண்டிய அக்கறையொன்று இலங்கைத் தமிழர்கள் – குறிப்பாக சாதாரண மக்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நிலையிலுள்ள புத்திஜீவிகள் மத்தியில் பிரதிபலிப்பதைக் காணலாம்:

(3) நடைமுறைக் காரணங்களுக்காக தமிழர் மத்தியில் திருப்திகரமான ஒரு தொடர்பை ஏற்படுத்தவும், பொது உணர்வையும் பொதுவான மனநோக்குகளையு எற்படுத்த தமிழ் எழுத்துக்கள் ஒரு சீராக அமைந்திருப்பது இன்றியமையாததாகும்·

(4) தமிழ்நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தமிழ் சஞ்சிகைகளையும், நூல்களையும் இன்னேரன்ன பத்திரிகைகளையும் படிப்பதால், இலங்கை வாழ் தமிழ்ப் பண்டிதர் தடையாணை பிறப்பிக்கமுடியாத நிலையில், தமிழ் மக்கள் தாங்களாகவே எழுத்துச் சிர்திருத்தத்தை ஏற்கமுன்வரும் காலகட்டத்தில் வாழ்கிருர்கள்.

(5) தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஒரு கல்வித்துறை ஏற்பாடோ அல்லது மொழித்துறை நிகழ்ச்சியோ என்று மட்டும் கருதலாகாது. அரசியற் காரணங்களுக்காகவும் இது அவசியமென்று கருதப்படுகிறது. இந்திக்கும், மராத்திக்கும் பொதுவாய் இருப்பதும், குஜராத்தியுடன் நெருங்கிய தொடர்புடையதுமாகிய தேவநாகரி எழுத்துக்கள் இந்திய மொழிகளுக்கு ஒரு பொதுவான எழுத்து வடிவமாக அமைந்தால் இந்தியாவின் ஒருமைப்பாடு பேணப்படும் என்பது திரு. வி. கே. ஆர். வி. ராவ் போன்ற அறிஞர்களின் கருத்தாகும். ஆகவே, தமிழ் எழுத்துக்கள் ஒரு சீராக அமைவது தமிழரின் ஒருமைப்பாட்டிற்கும், ஒத்தாசைக்கும் பயனளிக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது.

(6) தமிழ் எழுத்துக்கள் தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் ஒரு சீராக அமைந்திருந்தால் வேற்று நாட்டினர் எவ்விதக் கஷ்டமின்றி தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளும் நிலை வந்துவிடும். இடத்துக்கிடம், பிராந்தியத்துக்குப் பிராந்தியம் தமிழ் எழுத்துக்களில் வித்தியாசம் இருப்பின் புதிதாக மொழியைக் கற்றுக் கொள்வது நடைமுறைச் சாத்தியமாகாது.

மொழி நெகிழ்ச்கி உடையதாக இருக்கவேண்டும்,

(7) மொழி நெகிழ்ச்சி உடையதாக இருக்கவேண்டும். மொழி யாருடைய நலத்திற்காக இருக்கின்றதோ அவர்களுடைய நலத்திற்கும், காலத்தின் தேவைகளுக்கும் எற்ப நெகிழ்ந்துகொடுக்க வேண்டும்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் இரண்டு வரிசையாகப் பிரிக்கப்படலாம். முதல்பகுதியானது எழுத்து வடிவங்களில் மாற்றம். இரண்டாவது தமிழ் எழுத்துக் குறைப்பு. தமிழ் எழுத்து வடிவங்களில் மாற்றத்தை ஆதரிக்கும் சிலர் தமிழ் எழுத்துக்களைக் குறைப்பதை வன்மையாக எதிர்க்கவும் செய்கின்றனர். சிலர் ஒட்டு மொத்தமாகத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தையே எதிர்க்கின்றனர்.

### எழுத்து வடிவக் குறைப்பு

உயிர் மெய் எழுத்துக்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

**- ஈ. ஆர். திருச்செல்வம் -**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அல்லல் களைவாய் அன்னை அபிராமி

இராகம்: சாவேரி  தாளம்: ஆதி

பல்லவி

ஆர் ஆதரவு தருவார் அன்னையே
நீ ஆதரவுதர வாராய் எனில் எனக்கு (ஆர்)

அனுபல்லவி

சீரார் செருத்தனையில் தேவி மகாமாரி
ஆராதனைக்கு மகிழ் அன்னே அபிராமி (ஆர்)

சரணம்

கல்லைக் கனியாக்கி கருத்தைச் சுவையாக்கி
எல்லையில்லா இன்பம் எடுத்தெடுத்தே உரைக்கும்
சொல்லும் பொருளுமெனதுரிய நடனமிடும்
அன்னை அபிராமி அல்லல்களைக் களைந்து (ஆர்)

- புலவர் சு. சின்னத்தம்பி

[புளியங்கூடல் செருத்தனைப் பதி மகாமாரி அம்மன் ஆலய தீர்த்தோற்சவம் இன்று. இதனையொட்டி இக்கவிதை வெளியிடப்படுகிறது]

# தமிழ் எழுத்துச்சீர்திருத்தம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ணு, ஞு, ரு என்ற எழுத்துக்களைத் தவிர மற்றவை 'ா' என்னும் அரவைக் கொண்டு எழுதப்படுகின்றன. ஆகார நிரலில் ணு, ஞு, ரு என்ற எழுத்துக்களின் வடிவமே வேறு. தட்டச்சுப் பொறியில் இந்த மூன்று எழுத்துக்களுக்கும் 'ா' என்ற அரவைச் சேர்த்து எழுதினுல் தட்டெழுத்துப் பயன்பாட்டிற்கும், அச்சிடும் வசனத்திற்கும் ஏற்றதாயிருக்கும். அதாவது கீ போர்ட்டில் இந்த ணு, ஞு, ரு என்ற எழுத்துக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடம் அற்றுப்போகும். அச்சு எழுத்துப் பெட்டியிலும் மூன்று அறைகள் குறையும்,

உயிர்மெய் எழுத்துக்களில் ஐகார வரிசையில் ணை, லை, ளை, னை என்ற நான்கு எழுத்துக்களும் வடிவமைப்பில்வேறு விதமாக அமைந்துள்ளன. இவைதவிர பதினுன்கு ஐ கார எழுத்துக்களுக்கும் 'ை' என்ற சங்கிலிக் கொம்பைப் பாவிக்கிறோம். ணை, லை, ளை, னை என்ற நான்கு எழுத்துக்களும் சங்கிலிக் கொம்பைப் பாவிக்கும் பட்சத்தில் நான்கு எழுத்துக்களின் வடிவங்களும் குறையும். ஆகவே, ஆகார நிரலில் மூன்று எழுத்துக்களும் ஐ கார வரிசையில் நான்கு எழுத்துக்களும் சேர்ந்து மொத்தம் ஏழு எழுத்து வடிவங்கள் குறையும். பல்திறப்பட்ட நிலையில் இதனுல் பயனுண்டு. என்றுலும், குறிப்பாக கீ போர்ட்டில் (Key Board) ஏழு எழுத்துக்கள் குறையும். அச்சுக் கோர்ப்பதில் வேகம் அதிகரிக்கும்.

அடுத்தாற்போல் உயிர்மெய் எழுத்துக்களில் இகரங்களுக்கும் ஈகாரங்களுக்கும்பதினெட்டுத் தனித்தனி அச்சுகள் தேவைப்படுகின்றன. உயிர்மெய்யோடு சேராமல் பிரித்தால் மொத்தம் முப்பத்திநான்கு எழுத்து வடிவங்கள் குறைந்து நிற்கும். மற்றுப்படி உயிர்மெய் உ நிரலில் குறியீடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் அமைந்துள்ளன. பொதுவாக உ நிரலில் மூன்று வடிவங்களில் எழுத்துக்களை அவதானிக்கலாம். இந்த எழுத்துக்களுக்கும் புதிய குறியீடுகளை அறிமுகப்படுத்தினுல் பல எழுத்து வடிவங்கள் குறையும். ஊ நிரலில் வரும் எழுத்துக்களும் இந்த வகையான வடிவமைப்பைக்கொண்டவையே. உ நிரலில் உள்ள எழுத்துக்களுக்கும், ஊ நிரலில் உள்ள எழுத்துக்களுக்கும் 'ு' என்ற குறியீடுகளைச் சேர்த்து எழுதினுல் தட்டச்சுப் பொறிகளில் எழுத்துக்கள் குறைவடையும். அச்சுக்கோர்க்கும் தொழிலில் அச்சுப்பெட்டிகளும் மேலும் சுருங்கிவிடும்.

'டி' என்பது வடமொழிக் குறியீடு. இது ஏலவே தமிழில் வழக்கில் உண்டு. இதனுல், இதைத் தமிழுடன் இணைத்துக்கொள்வது சுலபம். 'ு' வைத் தமிழ் எழுத்துக்களின் வடிவத்துடன் இணைப்பதால் கருத்துப் பிணக்குகளும் ஏற்படலாம்.

### தமிழ் எழுத்துக் குறைப்பு

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு என்பது தமிழ்வழி மரபு. இதில் ஐ, ஔ என்ற எழுத்துக்களை இல்லாமல் செய்யவேண்டும் என்பது சிலரது கருத்தாகும். உதாரணமாக 'ஐ' யை எடுத்தால் 'ஐயர்' என்பதை அய்யர் என்று எழுதவேண்டி வரும். 'பாண்டவர் ஐந்து பேர்' என்று நாம் இன்றுவரை எழுதிவருவதை 'பாண்டவர் அய்ந்து பேர்' என்று எழுதவேண்டும். ஔவை என்பதை அவ்வை என்றும் எழுதுகிறுர்கள்,

ஐ, ஔ என்ற இரு எழுத்துக்களும் திராவிட மொழிகளிலும், ஏனைய இந்திய மொழிகளிலும் இருக்கின்றன. ஐ, ஔ என்ற எழுத்துக்களைத் தமிழில் இருந்து எடுப்பதால் பலபாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்என்று தமிழ் அறிஞர் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்த எழுத்துக் குறைப்பால் தமிழ் இலக்கணமும், தொல்காப்பிய இலக்கியங்களும் பாதிப்புக்குள்ளாகும் என்று அஞ்சப்படுகிறது. இத்தகைய நிலையில்தமிழ் எழுத்தை நன்கு கற்றவர்களையும், அதன் வரலாற்றையும், இலக்கணத்தையும், இலக்கியத்தையும் நன்கறிந்தவர்களையும் கூட்டித் தீர்மானத்துடன் செயற்படவேண்டும்,

## 'எல்லோரும் பார்த்தார்கள்'

ஒரு பெண்ணை கொலை செய்ததாக ஒருவன் மீது வழக்கு. பெண்ணின் சடலம் கிடைக்காவிட்டாலும், சந்தர்ப்ப சாட்சியங்களைக் கொண்டு எதிரிமீது வழக்கை தாக்கல்செய்துவிட்டார்கள் பொலிஸார்.

எதிரியின் சட்டத்தரணியோ கொலை நடந்திருக்கிறதா? என்பதே சந்தேகத்துக்குரியதென்றுவாதிட்டார். கொலையுண்டதாகக் கூறப்பட்ட பெண்ணைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தவர் திடீரென்று நீதிமன்ற வாசலை சுட்டிக் காட்டி இதோ அந்தப் பெண் என்றுர்.

ஜூரர்கள் எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

"பார்த்தீர்களா! உங்களுக்கே அவள் கொலையுண்டாள் என்பதில் முழு நம்பிக்கையில்லை. அதனுல்தான் அவள் உயிருடன் வந்திருக்கக் கூடும் என்று நினைத்து எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள் என்று மடக்கினுர் சட்டத்தரணி.

ஆனுலும் எதிரி குற்றவாளியென்றே ஜூரர்கள் ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர்.

எதிரியின் சட்டத்தரணி கோபத்துடன் ஜூரிகளைப் பார்த்து 'எல்லோரும் வாசலை திரும்பிப் பார்த்ததை கோர்ட்டில் அனைவரும் பார்த்தார்கள்'' என்றுர்.

'எல்லோரும் பார்த்தோம் ஆனுல் எதிரியைத் தவிர'' என்றுர் ஜூரிசபைத் தலைவர்!

# எண்சோதிடம்
## இவ்வாரமலர்

[இது பொதுவான பலன், சிலருக்கு கூட்டுஎண் பலம் வாய்ந்ததாயின் அதுவே பலன் செய்யும்]

### [1]

(1, 10, 19, 28 இல் பிறந்தவர்கள், 1ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இவ்வாரம் 1ம் எண்காரர்களுக்கு சோதனையும், வேதனையும் நிறைந்த காலமாகும். நல்லதைச் செய்தும் கெட்ட பெயர் சம்பாதிக்க நேரிடும். பணமுடை, களவுகொடுத்தல், அயலவருடன் வாக்குவாதம் உண்டாம். மனஅமைதிகுன்றும். உடல் நோயினுல் செலவு அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் சச்சரவும், தண்டனை இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விடும். பெண்களுக்கு ஒரு சிலருக்கு குறைப் பிரசவம், வயிற்றில் கட்டி போன்றவை ஏற்பட இடமுண்டு. இறைவணக்கம் தாக்கத்தைக்குறைக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள் 25,28,

### [2]

(2, 11, 20, 29 இல் பிறந்தவர்கள், 2ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இவ்வாரம் 2ம் எண்காரர்களுக்கு பலன் செய்யாது. மனவிரகதியினுல் மனம் அதிர்ச்சியடைந்து சோர்வு ஏற்படும். கடன்கூடப் பெறமுடியாது கஷ்டப்பட வேண்டியிருக்கும். தேகத்தில் சொறி, சிரங்கு போன்ற நோய்கள் ஏற்படலாம். ஒரு சிலருக்கு நீதிமன்றம் போகவேண்டி ஏற்படும், வீட்டில் துக்ககரமான சம்பவம் நடக்கவும் இடமுண்டு. காரியாலயத்தில் நிம்மதி இருக்காது. மனதில் ஆயிரம் வேலை திட்டமிட்டாலும் ஒன்றுமே நிறைவேருது. எதிர்பாலாரால் தொந்தரவுண்டு. வியாபாரத்தில் முதலைக் காப்பாற்றுவதே பெயரிபாடாகிவிடும்,

அதிர்ஷ்ட திகதிகள்; 25,28.

### [3]

(3, 12, 21, 30 இல் பிறந்தவர்கள், 3ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இவ்வாரம் 3ம் எண்காரர்களுக்கு திறமையான காலமல்ல. கஷ்டமும், துன்பமும், பணமுடையும், நண்பர்களின் உதவியு உண்டு. கவர்ச்சியாக வாழவேண்டும் என மனம் ஏவினுலும், வாழ்வு சுமாராகவே இருக்கும். வார இறுதியில் கடிதமூலம் நன்மையுண்டு. குடும்பசுகம் உண்டாயினும், பிள்ளைகளின் சுகக் குறைவு மனதை வாட்டும். சிலர் உங்களை ஏமாற்றி உங்களிடம் உள்ளவற்றைப் பறிக்க முயற்சிப்பர். உத்தியோகத்தில் மந்த நிலையே காட்டும். வியாபாரத்தில் இலாபம்கிட்டினுலும் பாரிய இழப்புக்களுக்கும் இடமுண்டு.

அதிர்ஷ்ட திகதிகள்: 26, 29. 30. 1.

### [4]

(4, 13, 22, 31 ல் பிறந்தவர்கள், 4ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இவ்வாரம் 4ம் எண்காரர்களுக்கு துரதிர்ஷ்டமான காலமாகும். நினைப்பவை ஒன்று, நடப்பவை வேருென்ருகவே இருக்கும். வீண் அவப்பெயர் கேட்டல், களவு கொடுத்தல், நம்பிக்கைத் துரோகம் என்பன சம்பவிக்கும். குடும்பத்தில் அடிக்கடி வாக்குவாதமும், மனமுறிவும் ஏற்படும். பிரயாணக் கஷ்டமும், பணத் தட்டுப்பாடும் இருக்கும். தேகத்தில் கட்டி வருதல் போன்ற நோய்களால் அவஸ்தைப் பட நேரிடும். குழந்தையால் தீமையேயன்றி நன்மையில்லை. வேலைத்தலதில் அமைதியினமைமேலதிகாரியின் சீற்றமும் கிட்டும். வியாபாரத்தில் தொழில் நட்டமும், மனச்சஞ்சலமும் உண்டாம்.

அதிர்ஷ்ட திகதிகள்: 25 ,28.

### [5]

(5, 14, 23 இல் பிறந்தவர்கள், 5ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இவ்வாரம் 5ம் எண்காரர்களுக்கு மிக்க வாய்ப்பான காலம். நினைத்ததைச் சாதிக்க உகந்த காலம். மனச் சந்தோஷமும், பொருள் வரவும் குடும்பத்தில் சுகமும் கிட்டும். மதிப்பும், மரியாதையும், கௌரவமும் உயரும். இல்லத்தில் விருந்துக்கும், கேளிக்கைக்கும் இடமுண்டு. திடீர் அதிர்ஷ்டம் உண்டாம். பூமி அல்லது வீடுவாங்கவும், சகோதரங்களால் நன்மையும்கிட்டும். கணவன்-மனைவி உறவு மிகவும் அன்யோன்யமாகவும், குதூகலமாகவும் இருக்கும். காரியாயத்தில் மதிப்பும், உயர்வும், சகலரது பாராட்டும் கிடைக்கும், வியாபாரத்தில் லாபமேயன்றி நட்டமில்லை. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவும்.

அதிர்ஷ்ட திகதிகள்; 25 , 23 29, 30.

### [6]

6, 15, 24ல் பிறந்தவர்கள், 6ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இவ்வாரம் 6ம் எண்காரர்களுக்கு அதிர்ஷ்டமான வாரமாகும். கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப் படும். சகல விதத்திலும் வாய்ப்பான காலம். ஒரு சிலர் நிச்சயம் வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு. ஆடை, ஆபரண. வாகனசேர்க்கையும், நல்ல பணப்புழக்கமும் உண்டாம். மதிப்பு உயரும். குடும்பத்தில் நன்மையான காரியங்கள் நடக்கும். குழந்தைகளின் சிறப்பு மனத்தை இதப்படுத்தும், வேலைத்தலத்தில் சக ஊழியர்களின் ஆதரவு, மேலோர் பாராட்டு. சிலருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். வியாபாரத்தில் ஆதாயமுண்டு. விஸ்தரிப்புக்கும் இடமுண்டு.

அதிர்ஷ்ட திகதிகள்: 26, 27, 29, 30. 1.

### [7]

7, 16, 25 இல் பிறந்தவர்கள், 7ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இவ்வாரம் 7ம் எண்காரர்களுக்கு பலன் செய்யாது. பெரும் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு. ஏராளம் கடன் பெற நேரிடும். கணவன் மனைவிக்கிடையே அபிப்பிராய பேதம்.குழந்தைகளால்கவலை. பிறரால் ஏமாற்றப்படுதல் உண்டாம். நா அடக்கமாக இருத்தல் நன்று. நீங்கள் நன்மைக்குச் சென்ருலும் தீமையாக மாறிவிடும். ஒரு சிலருக்கு சத்திரசிகிச்சைச்கும் இடமுண்டு. வாத சம்பந்தமான நோய் ஏற்படும். பிரயாணத்தில் விபத்தும் ஏற்படலாம். வேலைத்தலத்தில் பொருமை காரணமாக சச்சரவுகள் உண்டாகும். வியாபாரத்தில் நஷ்டம், களஞ்சியத்தில் களவு. ஊழியர் எதிர்ப்பு என்பன உண்டாம்.

அதிர்ஷ்ட திகதிகள்: 25,28.

### [8]

(8, 17, 26 இல் பிறந்தவர்கள், 8ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இவ்வாரம் 8ம் எண்காரர்களுக்கு, ஏனைய எண்காரர்களையும்விட மிக்க உன்னதமான காலமாகும். சென்றவிடமெல்லாம் சிறப்பு, கௌரவம், மனச் சந்தோஷம் உண்டாம். பணம் வருமேயன்றி உங்கள் கைவிட்டுப்போகாது. சேமிப்பு அதிகரிக்கும். இல்லத்தில் சுபகாரியம், குழந்தைகளால் நன்மை, அயலவர். நண்பர்களால் பேருதவிகிட்டும். வெளிநாடு செல்ல மிக வாய்ப்பு உண்டு. வசூலிக்க முடியாத கடன்கூட தானுக வந்துசேரும். வேலைத்தலத்தில் உயர்வு நிச்சயம், யாவரது ஒத்துழைப்பும், மதிப்பும் உண்டு.வியாபாரத்தில் அதிக லாபம் அத்தோடு வியாபார விஸ்தரிப்புக்கும் உகந்த காலம்.

அதிர்ஷ்ட திகதிகள் 26, 27, 27, 30, 1,

### [9]

(9, 18, 27-ல் பிறந்தவர்கள், 9-ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.)

இவ்வாரம் 9-ம் எண்காரர்களுக்கு ரொம்ப அதிர்ஷ்டமான காலமாகும். விரும்பிய விடயங்கள் கைகூடும். பல காலமாகத் தடைப்பட்ட ஒரு பிரச்னைக்கு இவ்வாரம் சாதகமான முடிவு ஏற்படும். பிரயாண லாபமும். தாராளமான பொருள் வரவும் உண்டாம். இல்லறச் சிறப்பும், மங்கள காரிங்களும் இடம்பெறும். ஒரு சிலர் தீர்த்த யாத்திரை செல்வர். உல்லாசத்திற்கு உகந்த காலம். பொதுச்சேவையால் மதிப்பும், மரியாதையும் உயரும். வேலைத்தலத்தில் கௌரவமும், எதிர்பாலாரின் ஆதரவும் உண்டு. வியாபாரத்தில் ஆதாயம் கிட்டும். கிளை ஸ்தாபனங்கள் நிறுவ மிக உகந்த காலமாகும்.

அதிர்ஷ்டத் திகதிகள்; 26, 27, 29, 30, 1.

எண் சோதிடர் எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்

## ஹாம்லெட்

ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் நாடகத்தில் ஹாம்லெட்டாக நடித்துப் பெரும் புகழ்பெற்றவர் ஹொலிவூட் நடிகர் றிச்சர்ட் பேர்ட்டன்.

ஹாம்லெட்டைப் பற்றி உங்கள் அபிப்பிராயம், அனுபவம் என்ன என்ற கேள்விக்கு றிச்சர்ட் பேர்ட்டன் கூறினுர்:

முந்நூறு வார்த்தைகளிலும் சரி அல்லது மூவாயிரம் புத்தகங்களிலும்சரி ஹாமலெட்ப் பற்றி யார் என்ன சொல்லிவிடமுடியும்? எத்தனையோ பேர் ஹாம்லெட்டாகத் தோன்றி நடித்துவிட்டார்கள். ஒவ்வொரு நடிகனும் ஹாம்லெட்டைத் தன் மனதில் எப்படி உருவகப் படுத்திக்கொள்கிருனே அப்படி ஹாம்லெட் மேடையில் தோன்றுகிருன்.

முதனமுதலில் 1944-ல் நான் ஆக்ஸ்போர்ட்டில் சேர் ஜோன் கீல்கட் ஹாம்லெட்டாக நடிப்பதைப் பார்த்தேன், நடிப்புக்கலை பற்றிய என் ஆசைக்கனவுகளை, லட்சியங்களையெல்லாம் அவர் தவிடுபொடி செய்துவிட்டார்; இவருக்கு இணையாகயாரால் இக்கலையில் உயர முடியும் என்று எண்ணினேன். ஆனுல் பின்னுல் சேர்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோவியத்-ஈரான் நல்லுறவு: அமெரிக்கா கண்டனம்!

## பயங்கரவாதத்துக்கு ரஷ்யா துணைபோவதாகக் குற்றச்சாட்டு!

(வாஷிங்டன்)

**சோவியத் யூனியன் ஈரானுடன் மீண்டும் உறவு கொண்டிருப்பது குறித்து அமெரிக்கா கண்டனமும் கவலையும் தெரிவித்துள்ளது.**

ஈரானுடன் நல்லுறவை ஏற்படுத்தியுள்ள சோவியத் யூனியனின் போக்குக் குறித்து விளங்கிக்கொள்ளமுடியவில்லை என்று அமெரிக்க ராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவு அளித்துவரும் ஈரானுடன் நல்லுறவை வைத்திருப்பதன்மூலம் சோவியத் யூனியன் பயங்கரவாதத்திற்குத் துணை போகின்றது என்றும் ராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

ஈரான் சபாநாயகர் ஜனுப் ரஸ்தான் ஜானி சோவியத் யூனியனில் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னரே அமெரிக்கா மேற்சொன்ன கருத்தை வெளியிட்டது.

சோவியத் அதிபர் திரு. மிகைல் கொர்பச்சேவ் ஈரான் சபாநாயகருடன் பேச்சு நடத்தியதுடன் ஈரானுக்கு இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கும் ஒப்பந்தங்களையும் செய்துள்ளார் என்றும் அந்த அதிகாரி குற்றம்சாட்டினார்.

# அமைதிப்படை வாபஸ்: சிதம்பரம் கருத்து

(சென்னை)

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை வாபஸ் பெறுவதற்கு இப்போது அங்கு சாதகமான சூழ்நிலை இல்லை.

இவ்வாறு இந்திய மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. பா. சிதம்பரம் மதுரையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கு திருப்திகரமான முறையில் அதிகாரங்கள் பகிர்ந்துகொடுக்கப்படவில்லை. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமைதியைப் பாதுகாப்பதற்கு இன்னமும் உரிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்றும் அவர்கூறினார்.

# தமிழ்நாட்டில் அணுசக்தி நிலையம்

(சென்னை)

இந்தியா தமிழ் நாட்டில் நவீன அணுசக்தி நிலையம் ஒன்றை அமைக்கிறது.

இந்த அணுசக்தி நிலையத்திற்கான பாதுகாப்புச் சாதனங்களை ரஷ்யா வழங்குகிறது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடன்குளத்தில் அமைக்கப்படவிருக்கும் இந்த நிலையத்திற்கு சோவியத் யூனியன் வழங்கும் நவீன பாதுகாப்புச்சாதனங்கள் சர்வதேச தரத்திலானவை என்றும் அறிவிக்கப்பட்டது.

# "ஜனநாயகத்தின் காவலன் அமரர் ஜவஹர்லால் நேரு"

## கருணாநிதி புகழாரம்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் அமரர் ஜவஹர்லால் நேரு வாழ்வாங்கு வாழ்ந்தவர். ஜனநாயகத்தின் காவலன், சிந்தனைச் சுரங்கம்.

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அமரர் நேரு நூற்றாண்டு விழா தொடர்பாக சென்னையில் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திரு. கருணாநிதி மேலும் கூறியதாவது:

போர்க் கழுகுகளின் இறகுகளை வெட்டி அமைதிப் புறாவைப் பறக்க விட்டவர் அமரர் நேரு.

நேரு நூற்றாண்டை ஒட்டி தமிழகத்தில் இவ்வாண்டு நவம்பர் மாதம் பெருவிழா ஒன்று கொண்டாடப்படும்.

# "எந்தநிலையையும்சமாளிக்க சீனா உறுதியாக உள்ளது"

## பாக். வெளியுறவுச் செயலரிடம் சீனப் பிரதமர் லீ

(பீக்கிங்)

சீன அரசு மிகவும் உறுதியான நிலையில் இருக்கிறது. சீனாவின் திறந்த கதவுக் கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை, சீர்திருத்த பகிரங்கக் கொள்கை எதுவுமே மாற்றம்செய்யப்படமாட்டாது.

இவ்வாறு சீனப் பிரதமர் திரு. லீ பெங் தெரிவித்துள்ளார்.

சீனாவில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ஜனுப் கானிடம் திரு. லீ பெங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. பெங் மேலும் கூறியதாவது:-

மாணவர் போராட்டத்தின் போது சீனாவில் கொந்தளிப்பும் புரட்சி நிலையும் இருந்தது உண்மைதான். எனினும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இன்று சீனா எந்த நெருக்கடியையும் சமாளிக்கக்கூடிய நிலையிலிருக்கிறது.

# மாணவர் கிளர்ச்சி; கைது தொடர்கிறது

(பீக்கிங்)

சீனாவில் தொடர்ந்தும் கலவரங்கள் இடம்பெற்றுவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்தும் கைதுசெய்யப்படுவதாகவும் நேற்றும் நான்கு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 17 ஆசிரியர்களும், மாணவர்களும் ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளையில், பொதுமக்கள் சகலரும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து கிளர்ச்சிக்காரர்களை எதிர்த்துப் போராட முன்வரவேண்டுமென்று சீன வானொலியும், தொலைக்காட்சியும் தொடர்ச்சியாக அறிவித்தவண்ணமிருக்கின்றன.

# மாணவர்களைசுட்டுக் கொல்லவேண்டாம்'

## அமெ. பிரதிநிதிகள் சபை கோரிக்கை

(வாஷிங்டன்)

சீன மாணவர் ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களைச் சுட்டுக் கொலைசெய்ய வேண்டாம் என்று அமெரிக்க

(7-ம் பக்கம் பார்க்க)

# அறிவொளி

## பிறைட் கல்வி வட்டம்

எமது கல்வி வட்டமானது உயர்தர மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இவ்வட்டத்தின் வெளியீடான "அறிவொளி" மூலம் மாணவர்களை மிகக் குறுகிய காலத்தில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யவைப்பதும் அறிவை வளர்ப்பதுமேயாகும்.

இவ்வட்டத்தில் சேரும் ஒவ்வொரு மாணவ/மாணவியும் தங்களுக்கு விருப்பமான கலை/வர்த்தகத் துறை சம்பந்தமான ஒரு பாடத்தின் ஒரு கேள்விக்கான சிறந்த விடையினையும் எழுதி எமது மாணவ கல்வி வட்டத்தில் இணைவதற்காகப் பெயர், விலாசத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படவேண்டும். எமது வெளியீடு ஒவ்வொரு மாதமும் ஒரு **"அறிவொளி"** என்ற ரீதியில் வெளியிடப்படும். இத்திட்டத்தில் சேரும் மாணவ/மாணவியர் அடையும் பலாபலன்கள்:

1. ஒரு புத்தகத்தில் 25க்கு மேற்பட்ட சிறந்த வினாவிடையை அறிவொளி உள்ளடக்கியதாக இருக்கும்.
2. அதிசிறந்த வினாவிடை எழுதும் மாணவர் பெயர், விலாசம் எமது வெளியீட்டில் வெளியிடப்படும்.
3. ஒவ்வொரு இதழிலும் சிறந்த விடை என எமது ஆசிரியர் குழுவால் தீர்மானிக்கப்படும் மூன்று கட்டுரைகளுக்கு சிறந்த பரிசுத் திட்டத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பு அளிக்கப்படும்.
4. இத்தகைய சிறப்புடன் வெளிவரும் அறிவொளி கல்வி வெளியீட்டின் விலை 20/-ஆகும்.

எனவே கல்வி வட்டத்தில் இணைய விரும்பும் மாணவர்கள் எமது அறிவொளி இதழ் 1, 2க்கான கட்டணமாகிய 40/-வை தபாற்கட்டளையாகவோ, காசுக் கட்டளையாகவோ இணைத்து உங்கள் பெயர், விலாசத்துடன் அனுப்பவும்.

காசுக்கட்டளையை இயக்குநர் (DIRECTOR, B. T. C.) எனும் பெயருக்குப் பெறப்படும் கந்தோர் கொழும்பு என எழுதவும்.

**Bright Study Circle**

P. O. BOX, 162, COLOMBO. (ஏ-275)

## சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளின்போதும் ஐந்து கிலோ அரிசியை ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்குமாறு கோரி தமிழ் நாடு இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஈ. என். சம்பத்தை விடுதலை செய்யுமாறும் அவர்கள் கோரிக்கைவிடுத்தனர்.

## அடையாறு ஆலமரம்மீண்டும் துளிர்க்கும்?

(சென்னை)

கடந்த வாரம் பலத்த காற்றினால் நிலத்தில் வீழ்ந்த 300 வயதுடைய அடையாறு ஆலமரம்மீண்டும் அது இருந்த இடத்தில் நாட்டப்பட்டது.

8 தொன் எடையுள்ள அதன் அடிமரத்தை பாரம் தூக்கியின் உதவியுடன் 250 பேர் பழைய இடத்தில் தூக்கி நிறுத்தினர்.

இம் மாதம் மீண்டும் துளிர்த்துவிடும் என [illegible]

## கே. சி. பந்த் அமெரிக்கா விஜயம்

(புதுடில்லி)

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. கே. சி. பந்த் 10 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேறகொண்டு அமெரிக்கா சென்றுள்ளார்.

திரு. பந்த் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சருடனும் மற்றும் அதிகாரிகளுடனும் சர்வதேச பாதுகாப்பு நிலைமை, இரு நாட்டு உறவு ஆகிய விடயங்கள் குறித்து பேச்சு நடத்துவார் என புதுடில்லி செய்திகள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் சகலவிதமான இறக்குமதி செய்யப்பட்ட திருமண பிறந்ததின விழா அழைப்பிதழ்களுக்கும், தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திகளுக்கும் பாடசாலை, காரியாலய உபகரணங்கள், மின்சார அலங்காரப்பொருட்களுக்கும் நியாயமான ஸ்தாபனம்:

**அம்பலவாணர் அன் சன்ஸ்,**

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ 276)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சபையில் அமளி துமளி!

# எதிர்க்கட்சியினர்வெளிநடப்பு

## அரசின் நடவடிக்கைகளுக்கு சுதந்திரக்கட்சி கண்டனம்

**பாராளுமன்றத்திலிருந்து லீ. துவான் நவீர்**

பாராளுமன்றத்தில் அவசர கால சட்டம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான திரு. ரிச்சார்ட் பத்திரன சில கருத்துக்களை கூற எழுந்த போது அரசதரப்பினர் செய்த குறுக்கீடுகள் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட ஏனைய எதிர்க்கட்சிகளின் உறுப்பினரானர் யாவரும் வெளிநடப்பு செய்தனர். அவசரகால சட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு சில வீமிடங்கள் இருந்தவேளையிலேயே இது நடைபெற்றது.

அவசரகால சட்ட பிரேரணைமீதான விவாதம் நடந்து கொண்டிருக்கையில் எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தொடர்பாக சுதந்திரக்கட்சி பிரதம கொறடாவான பத்திரன விளக்கம் கூற எழுந்த வேளையில் திரு. லலித் அத்துலத் முதலி விவாதத்தின் மீது பேச எழுந்தார். இதனையடுத்து சபை அமளிதுமளிப்பட்டது.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு.ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்த கூற்றில் திருமதி பண்டாரநாயக்கா தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்து தவருனது எனவும் அதுபற்றி விளக்கம் அளிக்க இரண்டு நிமிட அவகாசம் தரும்படியும் கோரி திரு. ரிச்சார்ட் பத்திரன எழுந்த வேளையிலேயே திரு. அத்துலத்முதலியும் பேச எழுந்தார். இதனைத்தொடர்ந்து சுமார் 10 நிமிடம் அமளி துமளிஏற்பட்டது. சில நிமிடங்கள் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதற்கு மத்தியிலும் திரு. ரிச்சார்ட் பத்திரன தொடர்ந்து உரையாற்றினுர்.

அவ்வேளையில் திரு. ரிச்சர்ட் பத்திரனவின் பேச்சை ஹன்ஸார்ட் அறிக்கையில் இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடப்பட்டது. பத்திரிகையாளர்களிடமும் இவரது பேச்சை வெவியிடக்கூடாது எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனைத்தொடர்ந்துபலத்த கூக்குரல்களுக்கு மத்தியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள்வெளிநடப்பு செய்தவேளையில், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தமது ஆசனங்களில் அமர்ந்திருந்தனராயினும் சிறிது நேரத்தின் பின் அவர்களும் வெளியேறினர்.

தொழில் சமூக சேவைகள் அமைச்சர் திரு. ரஞ்சித் அத்தப்பத்து பேசுகையில் கூறியதாவது:

### மக்களுக்கே பிரச்னை

''இன்று சிலர், அரசாங்கம் பிரச்னையில் மாட்டிக்கொண்டிருப்பதற்தற்காக மகிழ்ச்சியடைகிருர்கள். உண்மையில்மக்கள்தான் பிரச்னையில் உள்ளனர்.

''மக்கள் விடுதலை முன்னணியின்கொள்கைகளுக்கு நாம் இணங்கமுடியாது. ஆட்சியைக் கைப்பற்ற அவர்கள் எடுக்கும் செய்முறைகளையும் நடவடிக்கைகளையும் மக்கள் வெறுக்கிருர்கள். இந்நாட்டில் முதல் தடவையாக அவசரகால சட்டத்தை பாவித்தது 1956ல் இருந்த அரசாங்கம்தான். பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தை கொத்தலாவலயின் அரசாங்கம் முன்வந்த போது எதிர்க்கட்சியினர் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். எனினும் அவர்களே இச் சட்டத்தைப் பின்னர் பிரயோகிக்கவேண்டிய நிலை உருவாகியது.

### கூடுதல் அதிகாரம்

இன்று பொலிசாருக்கும், படையினருக்கும் கூடுதல் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மக்களின் நம்பிக்கையை அதிகரிக்கக்கூடிய வகையில் அவர்கள் அந்த அதிகாரங்களை பிரயோகிப்பார்களென நான் நம்புகிறேன்.

### வெளிநாடுகளில் பயமுறுத்தல்கள்

இரண்டு பெரும் பிரச்னைகளை அரசு எதிர்நோக்குகிறது. உள்நாட்டில் பிரச்னை தோன்றியுள்ள வேளையில் வெளிநாடுகள் சிலவற்றின் பயமுறுத்தல்களையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. மனித கொலைகளினுல் எதனையும் சாதித்துவிடமுடியாது.

அவசர கால சட்டத்தை முப்படைகளும், பொலிசாரும் அவதானமாக அமுல் நடத்த வேண்டும். இச்சட்டம் அமுலிலிருந்தபோது நடந்த சம்பவம் தொடர்பான தவருன கருத்துக்கு இடமளித்துள்ளது. அத்தகைய நிலை இனிமேலும் ஏற்படாதவாறு நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

காலி மாவட்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர் திரு. அமரசிறி தொடங்கொட பேசுகையில் கூறியதாவது:-

சாதாரண சட்டங்கள் இருந்தபோதிலும் அவசர காலச்சட்டம் இருந்தபோது நாட்டின் சகல நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது. மீண்டும் அமுல்செய்யப்பட மாட்டாது என நம்பப்பட்ட அவசர காலச்சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவசர காலச்சட்டம் பற்றியும், இச் சபையில் இருந்து நிறைவேற்றப்படும் ஏனைய சட்டங்கள் பற்றியும் மக்களிடம் நம்பிக்கையில்லை. பாராளுமன்றச் சட்டங்களை அவர்கள் நம்பாவிடின் பாராளுமன்றம் ஓர் அதியுயர் அமைப்பு என்ற தம்பட்டத்துடன் இங்கு கூடிப்பேசுவதிலும், தீர்மானங்களை எடுப்புதிலும் எது வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

### அரசு ஏற்படுத்திய பிரச்னை

பல்கலைக்கழக சட்டத்தினை காரணமின்றி திருத்தியது யார்? மாணவர் கவுன்சில்களை கலைத்து!செனட் சபைகளை ஒலித்தது மாணவர்களா? இவை அரசு ஏற்படுத்தியபிரச்னைகள்.

### முழுநாடும் அடகு

முழுநாடும் வெளிநாடுகளுக்கு அடகுவைக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் கம்பனிகளுக்கு கொடுத்துள்ளார்கள். தொழிலாளர் ஆயிரக்கணக்கில் வேலையிழந்துள்ளனர். சில தாய்மார்களை தமது குழந்தைகளை 2000 ரூபாவுக்கு விற்று கெசட் ்றக்கோடருடன் வீடு செல்லும் நிலை சமூகத்தில் உருவாகிவிட்டது. சமூகத்தை நாசமாக்கும் அளவுக்கு இந்த அரசு செயல்படுகிறது. இவற்றுக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

### மாணவர்களை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் சபை, சீனுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளையில் பெல்ஜியமும் சீனுவுக்கான சகல கடன் உதவிகளையும்நிறுத்தியுள்ளது.

### நெடுந்தீவு இளைஞர் சுட்டுக்கொலை

(நெடுந்தீவு)

வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகச்சென்றஇளைஞர் ஒருவர் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த ஏரம்பு நடராசா (24 வயது) என்பவர் தமது உறவினரின் வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக துணுக்காய் தெனியங்குளம் சென்றிருந்தார் என்றும் வழியில் வாகனமொன்றில் வந்த இனம் தெரியாதவர்கள் இவரையும் வேறு சிலரையும் அழைத்துச் சென்றதாகவும் நான்கு நாட்களின் பின்னர் அக்கரையாயன்குள சமாதான புரத்தின் ஆற்றங்கரையில் தலையில் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இந்து இளைஞர் பேரவை கூட்டம் இன்று

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட இந்து இளைஞர்பேரவையின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நல்லை ஆதினத்தில் பேரவைத்தலைவர் திரு. வெ. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாடசாலைகள் கிராமங்கள் தோறும் இந்து இளைஞர் மன்றங்களை ஆரம்பிப்பது பற்றி ஆராயப்படும் என்று பேரவை உபசெயலாளர் திரு. சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார்.

### ஹாம்லெட்

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

ஜோனே என்னை ஊக்கினுர். 'ஒவ்வொரு நடிகனும் ஒரு புதுவிதமான ஹாம்லெட்டைத் தோற்றுவிக்கின்ருன். அடிப்படை நடிப்புத் திறன் மட்டும் இருந்துவிட்டால் எல்லா நடிகர்களுமே ஹாம்லெட்டின் பாகத்தை ஏற்க இடமிருக்கிறது. ஹாம்லெட் என்கிற நாடகபாத்திரம் அத்துணை பெரிய சிருஷ்டி!' என்று சேர் ஜோன் எனக்கு அறிவுறுத்தினுர்.

கோடிக் கணக்கில் கொட்டி எடுக்கப்பட்ட ஹொலிவூட் படமான 'கிளியோ பாத்தர'வில் நடித்த அதே றிச்சேர்ட் பேர்ட்டன் தான் இதனைச் சொன்னவர். இவரது காதல் மனைவியும் பிரபல ஹொலிவூட் நடிகையுமான எலிசபெத் டெய்லர் இன்னமும் நடித்துக்கொண்டிருக்கிருர் என்பது வாசகர்கள் அறிந்த விடயமே.

தகவல்: **கணேஷ்**

## இராசி பலன்

**25-06-1989**

ஸப்தமி பின் இரவு 3.44 வரை; பூரட்டாதி பி.இ. 1.35 வரை, இராகுகாலம் 4-25 முதல் 5-59 வரை சித்தா அமிர்தயோகம். அசுபதினம்.

மேடம்:- பண விரயம், கௌரவம், தான தர்மம், குடும்பத்தில் பொறுப்பு, கல்வி ஞானம்.

இடபம்:- எண்ணங்கள் கைகூடும், மனமகிழ்ச்சி, குடும்ப சுகம், தூரத்து உறவு, உல்லாசப்பயணம்.

மிதுனம்:- தொழில் லாபம், குடும்பத்தில் நல்லுறவு, வியாபாரம் மந்தநிலை, உறவினர் ஒத்தாசை.

கடகம்:- கருத்து மோதல், பொருளாதாரக் கஷ்டம், மேலதிகாரிகள் கெடுபிடி, அலைச்சல்.

சிங்கம்:- ஏமாற்றம், முயற்சிகள் இழுபறி, வீண் விரயம், குடும்ப உறவில் சங்கடம்.

கன்னி:- குடும்பத்தில் பீடை, வருமானக் குறைவு, இராசசன்மானம், கடல்வழிப் பயணம், சுபம்.

துலாம்:- வாகனச் சிறப்பு, மங்கள நிகழ்ச்சி, அதிகாரிகள் ஒத்தாசை, குடும்ப சுகம்.

விருச்சிகம்:- தேகசுகம்பாதிக்கும், எதிரிகள் தொல்லை, தொழில் முடக்கம், வாக்கு வன்மை.

தனுசு:- குடும்பத்தில் அமைதியின்மை, கடன்சுமை, பெரியோர் ஆசி, தொழில் நஷ்டம், கவலை.

மகரம்:- காரிய சித்தி, அதிகாரம், பாராட்டு, இராசசன்மானம், குடும்பத்தில் சுபகாரியம்.

கும்பம்:- புத்திரர்வழிக் கஷ்டம், தடை தாமதம், முதலீடுகள் லாபம் தராது, மனக் குறைவான நிகழ்ச்சி.

மீனம்:- மேலதிகாரிகள் நல்லெண்ணம், குடும்ப பாசம், இனசன உதவி, காரியவெற்றி, பணவரவு.


Chinese Restaurant on Rent

யாழ். மாநகர எல்லைக்குள்ளும், ரயில்வே ஸ்டேசனிற்கருகாமையிலும், சகல வித வசதிகளோடு அமைந்துள்ள

"சைனீஸ் றெஸ்டோரன்ற்"

ஒன்று ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:

S.RAJATHURAI & CO.,
ACCOUNTING & TAX CONSULTANTS
KASTHURIAR ROAD,
(KANNATHIDDY JUNCTION)
JAFFNA.
TIME: WEEK DAYS 9 a.m.—12-00

(சி-3003)


## 91-ம் நாள் நினைவஞ்சலி



**ரவி**

(கொட்டடி)

ஆண்டவன் படைப்பு: 15—01—1963

ஆண்டவன் அழிப்பு: 27—03—1989

நாம் மரணத்தைக் கண்டு அஞ்சப் போவதில்லை. ஏனெனில் மரணத்தை விடக் கொடுமையான கொடூரமானது அடிமைத்தனம். எனவே நாம் மரணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்ருேம்.

உன் பிரிவால் வாடும்:

உறவினர்களும், நண்பர்களும்.

சீனிவாசகம் ரேுட்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(சி-3002)


ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
3-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்—நதியா நடித்த
சின்னத்தம்பி பெரியதம்பி



நியூசாந்தி யாழ்நகர்
10-30, 2-30 மணிக்கு
விஜயகாந்த் — பூர்ணிமா
சங்கிலிமுருகன்
சட்டம் ஒரு இருட்டறை
(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் நடைபெறும் வேலைநிறுத்தம்!

# தொழில் நிறுவனங்கள் ஸ்தம்பிதம்!

(கொழும்பு)

தென்னிலங்கையில் தொடர்ந்து நடைபெறும் வேலைநிறுத்தப்போராட்டத்தினால்; அரச, தனியார்துறை நிறுவனங்கள் யாவும் செயலிழந்துள்ளன.

கடந்த 14 நாட்களாக நடைபெற்றுவரும் போக்குவரத்துச் சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தத்தினால் போக்குவரத்துச் சேவை முற்றாக ஸ்தம்பித்துள்ளதுடன், நாட்டின் ஏனைய பாகங்களிலும் தொடரலாம் என்று அஞ்சப்படுகிறது.

வேலைநிறுத்தம் செய்துள்ள 55 ஆயிரம் ஊழியர்களும் நாளை திங்கட்கிழமைக்கு முன் கடமைக்குத் திரும்பாவிடில் வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

போக்குவரத்துச் சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து தொலைத் தொடர்பு ஊழியர்களும் தமது கடமைகளைப் பகிஷ்கரிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து பழைய மார்க்ஸிய இடதுசாரி இயக்கத்தினரின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 11 தொழிற்சங்கங்களும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளன.

## நெல்லியடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகள் மூடப்பட்டே இருந்தன. சனநடமாட்டமும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. திடீரென 'கிரனைட்' குண்டு வெடிச் சத்தமும், துப்பாக்கி வெடிச் சத்தமும் கேட்டன. சனங்கள் அல்லோலகல்லோலப்பட்டு ஓட்டம்பிடித்தனர். நெல்லியடி பிரதான வீதியால் போக்குவரத்திலீடுபட்டிருந்த வாகனங்கள் வேறு வீதிகளால் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தன. வீதிகள் எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

## "பிள்ளைகள் மீதுபெற்றோரின் கண்காணிப்பு அவசியம்"

(சுன்னாகம்)

''பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குமட்டும் சமூகமளித்துவிட்டு வெறுமனே பார்வையாளர்களாக இருப்பதினால் பாடசாலையை வளர்த்தெடுக்கமுடியாது. மாதம் ஒரு தடவையாவது பாடசாலைக்கு வந்து அதிபர், ஆசிரியர்களைச் சந்தித்து கலந்துரையாடி அன்றாட வாழ்க்கைக்குத் துணைபுரியவேண்டும்.''

இவ்வாறு மருதனாமடம் கோட்டக்கல்வி அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் உடுவில் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பழைய மாணவிகள் சங்கக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

இளைப்பாறிய அதிபர் திருமதி சோமசுந்தரம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. குலசேகரம் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது: கல்லூரி வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள் கற்றல், கற்பித்தலில் நேரடியாகப் பங்கு கொள்ளவேண்டும். தமிழ் பேசும் மக்களுக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தருமசாதனம் செய்து வைத்த இக் கல்லூரிக்குப் பழைய மாணவிகளின் பங்களிப்பு தற்போது கிடைப்பதில்லை: அறுபத்திநாலாயிரம் சதுரஅடி பரப்புள்ள கட்டிட வசதியுள்ள இக்கல்லூரியை அகில இலங்கையிலும் முதன்மைபெற்ற கல்லூரியாக உயர்த்தச் சகலரும் உதவவேண்டும்''

## சுதேசியப் பொருள்களுக்கு ஊக்கமளிக்க ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திப்பொருள்களையும், கலைப்படைப்புக்களையும் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தவும், வியாபாரரீதியில் விற்பனை செய்யவும் யாழ்-பிரெஞ்சு நட்புறவுச்சங்கத்தினர் முன்வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிறுகைத்தொழிலாளர்களால் தயாரிக்கப்படும் பனை வளத்துடன் சம்பந்தப்பட்ட பாவனைப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும், இதேபோன்ற பிற உற்பத்திப் பொருள்களையும் மக்கள் மத்தியில் பரப்பிசுதேசியபொருள்களுக்கு ஆதரவும், ஊக்கமும் கொடுப்பதற்காக யாழ்-பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்தில் விற்பனைச்சாலையும், காட்சிச் சாலையும் அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோல உள்ளூர் ஓவியர்கள், சிற்பக் கலைஞர்கள், கைப்பணி வல்லுநர்கள் ஆகியோரது பொருள்களையும் மேற்படி சங்கத்தினர் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த விரும்பியுள்ளனர்.

உள்ளூர் கலைஞர்கள், சிறுதொழில் உற்பத்தியாளர்கள் யாழ்-பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## வடபகுதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிடி அதிகரித்துள்ளதாகவும் கொழும்பில் பல ஹோட்டல்களிலும், தங்குமிடங்களிலும் உள்ள வடபகுதி இளைஞர்கள் பொலிஸாரின் தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருவது சாதாரணமாகி விட்டது என்றும் தெரியவருகிறது.

வெளிநாடு செல்வதற்காகவும், வேறு முக்கிய அலுவல்கள் நிமித்தமும் கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்களே கடந்த சில தினங்களாக தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்டுவருவதாக நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்களை, குறிப்பாக வடபகுதி இளைஞர்களை இலங்கைப் பொலிஸார் திடீரென, பரவலாக கைது செய்வதன் காரணம் தெரியவில்லை என்றும் சம்பந்தப்பட்ட பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

## மதிய உணவுத் திட்டம்:
### 40 லட்சம் மாணவர் பயனடைவர்

(யாழ்ப்பாணம்)

மதிய உணவுத்திட்டத்தின் மூலம் நாடெங்கும் உள்ள நாற்பது லட்சம் மாணவர்கள் பயனடைவதாக கல்வியமைச்சில் மதிய உணவுக்குப் பொறுப்பாகவுள்ள கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் தெரிவித்தார்.

மதிய உணவுத்திட்டத்திற்கு முன்னர் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு 'பிஸ்கட்' வழங்கும் திட்டம் நடைமுறையிலிருந்தபோது பதினேழு லட்சம்மாணவர்களுக்கு 'பிஸ்கட்' வழங்கப்பட்டதாகவும் இதற்கு ஒருமாதம் இருநூறு மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் மதிய உணவுத்திட்டம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் 'சனசக்தி' திட்டத்தின் ஓர் அம்சமாகும் என்று கூறிய அவர்; இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சில பாடசாலைகள் சிரமப்பட்டாலும் காலப் போக்கில் மாணவர்கள், பெற்றோர் மத்தியில் இதற்கு நல்ல ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பாடசாலைகளில் வசதிக்கட்டண செலவில் கற்பிக்கும் ஆசிரியர் தொகை அதிகரித்துள்ளது. இதனை நிறுத்துவதற்கு விரைவில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் ஆண்டு விழா இன்று காலை யாழ். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கண்ணிவெடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் சிக்குண்ட வாகனமும் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## புதிய ஆசிரியர்களுக்கு
### பயிற்சிக் காலத்திற்கும் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்கள் பயிற்சிபெறும் காலத்திற்கும் சம்பளம் வழங்கப்படவேண்டுமென்று சகல பிராந்திய கல்வித் திணைக் களங்களுக்கும் கல்வியமைச்சு பணிப்புரை ஒன்றை விடுத்துள்ளது.

ஆசிரியர் சேவைக்கு முன் பயிற்சிபெறும் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வழங்கப்படும் பத்துநாள் கடமை லீவுக்கும் சம்பளம் வழங்கப்படவேண்டுமென்றும் இப் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிப்புரையின் பிரகாரம் சேவை முன் பயிற்சி பெறும் ஆசிரியர் ஒருவருக்கு ஒரு மாதம் சம்பளம் வழங்கப்படுகிறது.

எனினும் பயிற்சிபெற்றபின் கடமை லீவு முடிந்த நாளிலிருந்து கடமை ஏற்கும்நாள் வரை சேவையற்ற காலமாகக் கருதப்படுவதால் இதற்கு சம்பளம்வழங்கப்படமாட்டாது.

## "உடலும், உளமும் சேர்ந்து வளருவதே பூரணவளர்ச்சி"

(சுன்னாகம்)

''உடலும் உளமும் சேர்ந்து வளருவதே பூரண வளர்ச்சியாகும். சிறுவயதிலிருந்தே இவ் வளர்ச்சிக்கு அடிகோலப்படவேண்டும்.''

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான ஆதரவில் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அளவெட்டி பாரதி பாலர் பாடசாலையும், மல்லாகம் சன்மார்க்க பாலர் பாடசாலையும் இணைந்து நடத்திய விளையாட்டுப்போட்டி வைபவத்தின் போது உரையாற்றிய தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் திரு. வி. இராசையா மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி இந்திராதேவி குணபாலன் தலைமையில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்துவைத்தார். வடபிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குநர் திரு. சி. சிவசுப்பிரமணியம், பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர் வாழ்வு நிதியம் உதவி

(யாழ்ப்பாணம்)

'அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83' நேற்று 12 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை வன்செயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து அன்பளிப்பாக வழங்கியது.

'நொரூட்' ஸ்தாபனத்தின் உதவியுடன் இவ்வுதவி வழங்கப்பட்டது. நிறுவனத் தலைவர் திரு. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் மீன்பிடி உபகரணங்கள், தையல் மெஷின்கள் உட்படப் பல பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

## சிறையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய கமிட்டி கூட்டத்திற்கு பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.

திரு. ஷியாவுல் சியாங், ஜனநாயக ஆதரவு இயக்கத்தை ஆதரித்தார் என்ற காரணத்தினாலேயே அரசியல் கட்சி நிலையியற் குழுவிலிருந்தும் பதவிகளிலிருந்தும் அரசியல் உயர் பீடத்திலிருந்தும் விலக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு கோடியே எழுபது லட்சம் மக்கள் உறுப்பினர்களாக உள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலரான திரு. ஷியாவுல் சியாங்கிற்குப் பதிலாக கட்சியின் ஷாங்காய் பிரிவுத் தலைவரான ஸியாங் [illegible]

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 30ம் திகதி வெள்ளியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அடுத்த மாதம் 8ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## பரிசளிப்பு விழா

(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் மத்திய மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் மன்னாரில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் எஸ். வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மன்னார் ஆயர் கலாநிதி மேதகு. தோமஸ் சவுந்திரநாயகம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசுகள் வழங்கினார்.

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டக்கல்வி அலுவலகத்திலிருந்து புதிய ஆங்கில தட்டச்சு இயந்திரம் ஒன்று அண்மையில் திருடப்பட்டுள்ளது.

சம்பவதினம் இரவு கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் இதனைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone: 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org